# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம் திருநெல்வேலி மாவட்டம்

## முன்னிலை: திரு.சி.செந்தில்குமார், பி.காம், பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்

2021 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 8–ம் நாள், வெள்ளிக்கிழமை

**ஐ.ஏ.எண்.2/2020**
**இன்**
**அ.வ.எண்.143/2019**
**In**
**CNR.No.TNTL0D-000264-2019**

சேது சுப்பிரமணியன் ... மனுதாரர்/வாதி

//எதிர்//

சேது ராமலிங்கம் (எ) ரவி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பு 24.9.2021 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.இராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.வி.டி.பெருமாள் பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள்வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் அன்டர் ஆர்டர் 26 ரூல் 9 சி.பி.சி–ன்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.<u>மனுவின் சுருக்கம்:-</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஸ்டேட்மெண்ட்டில் தபசில் மொத்த விஸ்தீரணத்தை ஆட்சேபித்து உள்ளார்கள். சொத்தின் உரிமையையும் மறுத்துள்ளார்கள். மேலும், எதிர்மனுதாரர் கட்டியுள்ள வீடு ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என்றும், அந்த வீட்டிற்கு தெற்கேயும் தங்களுக்கு சொந்தமான காலிமனை இருப்பதாகவும் கூறியுள்ளார்கள். அது முற்றிலும் தவறு ஆகும். மனு தபசில் சொத்து தென்புறமாகவும், எதிர்மனுதாரர் பிரஸ்தாபிக்கும் சொத்து வடபுறமாகவும் உள்ளது. எதிர்மனுதாரர் வீட்டு தெற்கு சுவரை தனக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளார். மேற்படி சுவருக்கு தெற்கேயுள்ள மனையிலும் குப்பை கூளங்கள் போட்டும் ஒரு பகுதியில் வைக்கோல் படப்பையும் வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். ஆக்கிரமிப்பினை அகற்றி காலி மனையாக சுவாதீனம் கேட்டு பிராது தாக்கல் செய்துள்ளார். எனவே, தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிருரையின் சுருக்கம்:-</u>**

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பிராது தபசில் சொத்து மற்றும் எதிர்கோரிக்கையுள்ள சொத்துக்களையும் சர்வேயர் உதவியுடன் அளந்து கமிஷனர் பார்வையிட்டு அளவீடு செய்து கமிஷனர் அறிக்கை தாக்கல் செய்ய இந்த எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4. பிரச்சனை:-</u>**

இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் கோரியுள்ள நீதிமன்ற ஆணையர் நியமனம் இந்த வழக்கிற்கு அவசியமானதா? இந்த மனு சட்டப்படி அனுமதிக்கத்தக்கதா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**<u>தீர்வு:–</u>**

5.1. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில்எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஸ்டேட்மெண்ட்டில் தபசில் மொத்த விஸ்தீரணத்தை ஆட்சேபித்து உள்ளார்கள் என்றும், சொத்தின் உரிமையையும் மறுத்துள்ளார்கள் என்றும், மேலும், எதிர்மனுதாரர் கட்டியுள்ள வீடு ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என்றும், அந்த வீட்டிற்கு தெற்கேயும் தங்களுக்கு சொந்தமான காலிமனை இருப்பதாகவும் கூறியுள்ளார்கள் என்றும், அது முற்றிலும் தவறு ஆகும். மனு தபசில் சொத்து தென்புறமாகவும், எதிர்மனுதாரர் பிரஸ்தாபிக்கும் சொத்து வடபுறமாகவும் உள்ளது என்றும், எதிர்மனுதாரர் வீட்டு தெற்கு சுவரை தனக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளார் என்றும், மேற்படி சுவருக்கு தெற்கேயுள்ள மனையிலும் குப்பை கூளங்கள் போட்டும் ஒரு பகுதியில் வைக்கோல் படப்பையும் வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும், ஆக்கிரமிப்பினை அகற்றி காலி மனையாக சுவாதீனம் கேட்டு பிராது தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

5.2. இதற்கு மாறான வகையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பிராது தபசில் சொத்து மற்றும் எதிர்கோரிக்கையுள்ள சொத்துக்களையும் சர்வேயர் உதவியுடன் அளந்து கமிஷனர் பார்வையிட்டு அளவீடு செய்து கமிஷனர் அறிக்கை தாக்கல் செய்ய இந்த எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

5.3. இந்நிலையில், இந்த வழக்கை கவனமாக பரிசீலித்து பார்க்கும்போது மனுதாரர்/வாதி தரப்பில் எதிர்மனுதாரர் கட்டியுள்ள வீடு ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என்றும், அந்த வீட்டிற்கு தெற்கேயும் தங்களுக்கு சொந்தமான காலிமனை இருப்பதாகவும் கூறியுள்ளார்கள் என்றும், அது

முற்றிலும் தவறு ஆகும். மனு தபசில் சொத்து தென்புறமாகவும், எதிர்மனுதாரர் பிரஸ்தாபிக்கும் சொத்து வடபுறமாகவும் உள்ளது என்றும், எதிர்மனுதாரர் வீட்டு தெற்கு சுவரை தனக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ளார் என்றும், மேற்படி சுவருக்கு தெற்கேயுள்ள மனையிலும் குப்பை கூளங்கள் போட்டும் ஒரு பகுதியில் வைக்கோல் படப்பையும் வைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றும், ஆக்கிரமிப்பினை அகற்றி காலி மனையாக சுவாதீனம் கேட்டு பிராது தாக்கல் செய்துள்ளார். எனவே, நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக்கோரி அன்டர் ஆர்டர் 26 ரூல் 9 சி.பி.சி–ன்படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பிராது தபசில் சொத்து மற்றும் எதிர்கோரிக்கையுள்ள சொத்துக்களையும் சர்வேயர் உதவியுடன் அளந்து கமிஷனர் பார்வையிட்டு அளவீடு செய்து கமிஷனர் அறிக்கை தாக்கல் செய்ய இந்த எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ள நிலையில் தாவா தபசில் சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் மூலம் சர்வேயர் துணையுடன் அளவீடு செய்து அதுகுறித்த அறிக்கை மற்றும் வரைபடத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்பட்சத்தில் தான் இந்த வழக்கு பிரச்சனை குறித்து இந்நீதிமன்றம் ஒருமித்த தீர்வு காண வசதியாக இருக்கும். அதனால், தாவா தபசில் சொத்துக்களை சர்வேயர் துணையுடன் பார்வையிட்டு அதன் அங்க அமைப்புகளை குறித்து கொண்டும், அளவீடு செய்தும் அதுகுறித்த அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே, மனுதாரர்/வாதியின் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரும் இம்மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக, மனுதாரர்/வாதியின் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையராக திரு.P.லெனின், வழக்கறிஞர் அவர்களை நியமிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.3000/– நிர்ணயம் செய்து, அதை மனுதாரர்/வாதி நேரடியாக நீதிமன்ற ஆணையருக்கு**

**செலுத்தப்பட வேண்டும். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினர்களுக்கும் முறையான முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு இம்மனு தபசில் சொத்தினை பார்வையிட்டும், அங்க அமைப்புகளை குறித்தும், சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரை கொண்டு அளவீடு செய்தும் அதுகுறித்த அறிக்கை மற்றும் வரைபடம் வருகின்ற 8.11.2021–ம் தேதிக்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா:9.11.2021.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–திரு.சி.செந்தில்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

ஒம்/–திரு.சி.செந்தில்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

முு.மா.உ.நீ. அம்பாசமுத்திரம்
ஐ.ஏ.எண்.2/2020
இன்
அ.வ.எண்.143/2019
வரைவு/நேரிய உத்தரவு
நாள்:8.10.2021